[21st December 1956

Issue of certified copies of documents by the Revenue authorities in Pudukkotai division

* 397 *Q.*—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state why supply of certified copies of documents containing false allegations made by village officers against members of the public are refused by the Revenue authorities in Pudukkottai division, Tiruchirappalli district?

THE HON. SRI M. A. MANICKAVELU : An offical communication made by a village officer to his superiors is privileged from disclosure as one made in an official confidence, under Section 124, of the Evidence Act, 1872. Therefore request for certified copies of the documents are refused.

SRI V. BALAKRISHNAN : உத்தியோக முறையில் எழுதப்படுகிற தஸ்தாவேஜுகளில் பொய்யாக எழுதி இருந்தால் அதைப் பாதுகாக்க சலுகை கொடுப்பது நியாயமாகுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதிலே நியாய அநியாய சமாசாரம் எழவில்லை. ரூல் பிரகாரம் ஒரு ஆபீஸரைப் பற்றி மேல் ஆபீஸர் ரகசியமாகத் தகவல் எழுதினாலும் அது பாதுகாக்கப்படத் தான் வேண்டும்.

SRI V. BALAKRISHNAN : தயவு செய்து நான் கேட்டிருப்பது தனிப் பட்ட நபரைப்பற்றி பொய் குற்றச்சாட்டுகளை எழுதினால் அதற்குப் பாதுகாப்பு அளிப்பது நியாயமா என்பது தான் என்பதைக் கவனிக்கவும். அந்தப் பொய்க் குற்றச்சாட்டுகளை அவர்களுக்கே காட்டி அதற்கு ஆவன செய்யாமல் அதைப் பாதுகாக்கக்கூடாது. உத்யோக விஷயங்களுக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது.

THE HON. SRI M. A. MANICKAVELU : பொய் விஷயம் மாத்திர மல்ல. அதிலே காதல் விஷயம்கூட எழுதி இருக்கலாம். (சிரிப்பு)

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—POINT OF INFORMATION *RE.*

(1) INTRODUCTION OF TAMIL AS STATE LANGUAGE.

SRI M. KALYANASUNDARAM : (பாயின்ட் ஆப். இன்பர்மேஷன்). கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இன்று எதிர் பாராத வகையில் ஒரு நல்ல செய்தியை பத்திரிகையில் பார்த்தேன். அது எல்லோரும் வரவேற்கக் கூடிய செய்தி தான். கனம் நிதி அமைச்சர் அவர்கள் நேற்று வெளியே ஏதோர் இடத்தில் பேசும் போது இந்த சட்ட சபைக் கூட்டம் முடிவு அடை வதற்குள்ளாகவே தமிழை ஆட்சிமொழியாக்கும் மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றப்போவதாகப் பேசியிருக்கிறார். அதை அவர் முதலில் இந்தச் சட்ட சபையில் அறிவித்திருந்தால் இன்னும் விசேஷமாக இருக் கும். நல்ல விஷயத்தை வெளியிட்டிருப்பதற்காக அவரைப் பாராட்டு கிறேனே தவிர அதனால் நான் வருத்தப்படவில்லை. அவர் தெரிவித்திருக் கும் முறைப்படி இந்தக் கூட்டத்திலேயே தமிழை ஆட்சிமொழியாக்கும் மசோதா கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும் புகிறேன். உண்மையான விவரம் என்ன, எப்பொழுது அந்த மசோதா இந்தச் சபையின் விவாதத்திற்கு வர இருக்கிறது, என்பன போன்ற விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இது ஒன்றும் புதிய உரை அல்ல. கவர்னர் உரையில் அதைப்பற்றி

21st December 1956] [Sri M. Kalyanasundaram]

குறிப்பிட்டிருக்கிறது. அந்த மசோதா இன்றைக்கு கெஜெட்டில் பிரசுரிக்கப்படும். பிரசுரமானதற்குப் பிற்பாடு என்னுடைய அவா என்னவென்றால் இந்தச் சட்ட சபையானது கடைசியாகச் செய்யக் கூடிய ஒரு காரியமாக அதை எடுத்துக்கொண்டு அந்த மசோதாவை இந்தக் கூட்டத்திலேயே நிறை வேற்றிவிட வேண்டும் என்பது தான். அதை எல்லா அங்கத்தினர்களும் வற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். (பலத்த வரவேற்பு ஆரவாரம்.) ஆகையால் மற்ற எல்லாக் காரியங்களையும் முடித்துவிட்டு இந்த மசோதாவை இந்தச் சபையில் எடுத்துக் கொண்டு விவாதித்து நிறைவேற்றி விட முடியும் என்று நினைக்கிறேன்.

(So e hon Me bers stood up in their places)

DEPUTY SPEAKER : I cannot all w a discussion on this matter. The Hon. Minister has already given the information.

(2) FRAMING OF RULES UNDER THE MADRAS CULTIVATING TENANTS (PAYMENT OF FAIR RENT) ACT 1956.

SRI M. KALYANASUNDARAM : இன்னொரு விஷயம், நமது ரெவினியூ அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். இந்தச் சபை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றும், நேற்றும் தான் அவர் சபையில் இருக்கிறார். அவர் முதலில் இருந்து சபைக்கு வந்திருந்தால் இங்கே நடந்த பொது விவாதத்தில் எழுப்பப்பட்ட பிரச்னைகளை எல்லாம் தெரிந்து கொண்டிருக்கலாம். நாம் விவசாய விஷயத்தில் இரண்டு சட்டங்கள் நிறைவேற்றி இருக்கிறோம். குத்தகை விவசாயிகளின் வாரச் சட்டம் பாஸாகியிருக்கிறது. ஆனால் அந்தச் சட்டத்தைத் தொடர்ந்து வெளியிடப்படவேண்டிய விதிகளை எல்லாம் வெளியிடாமல் இருப்பதனால் கிராமங்களில் பெருத்த கிளர்ச்சிகள் இருந்து கொண்டிருக்கின்றன. நாம் என்ன பலனை குத்தகைதாரர்கள் அடையவேண்டுமென்று நினைத்தோமோ அதை அவர்கள் அடையவில்லை. எந்த பாரத்தில் எழுதவேண்டும் என்பன போன்ற விதிகளை எப்பொழுது ஏற்படுத்தப்போகிறார்கள் என்பதை அவர்கள் விளக்க வேண்டும். அது எல்லாம் புதிராக இருக்கிறது.

THE HON. SRI M.A. MANICKAVELU: நியாய வார மசோதா விஷயமாக தகராறு ஏதாவது வந்தால் அதை விசாரிப்பதற்கு ஜில்லா முன்சீப்புக்கு அதிகாரம் வழங்கி இருக்கிறது. இந்த விதிகளை கொண்டுவருவதற்கு முன் ஹைக்கோர்ட்டை கலக்கவேண்டியிருக்கிறது. ஹைகோர்ட்டை கேட்டு இருக்கிறோம். நேற்று கூட அதைப் பற்றி ஞாபகப்படுத்தியிருக்கிறோம். கூடிய சீக்கிரத்திலேயே எல்லாவற்றையும் தயாரித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்.

SRI M. KALYANASUNDARAM: (On a point of clarification, Sir) இந்த விதிகளை வெளியிட்டு அவைகளை சட்ட சபை முன்பு வைத்து, சபையின் அபிப்பிராயத்தை தெரிந்துகொள்ளவேண்டும். இந்தக் கூட்டம் முடிவதற்குள் விதிகளைக்கொண்டு வராவிட்டால், அவைகளைப்பற்றி அபிப்பிராயம் சொல்லுவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். அதற்காகவே தான் சர்க்கார் தாமதம் செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த மாதிரி மனப்பான்மை எனக்குக் கிடையவே கிடையாது. (சிரிப்பு.)

(3) NAMING OF THE STATE AS TAMIL NADU.

(Some hon. Members were seen standing in their seats.)

DEPUTY SPEAKER: This is no question time.

SRI K. VINAYAKAM: (On a point of information, Sir) கனம் நிதி அமைச்சர் அவர்கள் தமிழ் ஆட்சி மொழி ஆவதைப்பற்றி வெளியிட்ட கருத்து வரவேற்க கூடியதே. தமிழ் மொழியை ஆட்சி மொழி ஆக்கவேண்டுமென்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் வற்புறுத்தி